1. அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ4) நாள் : 19.07.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ4) நாள் : 26.07.2018-ன்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 அட்டவணை 4-ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் வாணியம்பாடி நகராட்சி சொத்து வரியினை 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 20555/2018/ஆர்1 நாள் : 20.08.2018 மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 20555/2018/ஆர்1 நாள் : 21.08.2018 உடன் இணைத்து வரப்பெற்ற 16.08.2018-ம் தேதிய கூட்ட நடவடிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதலில் வகுக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி 01.04.2018 முதல் சொத்துவரி சீராய்வு நடைமுறைப்படுத்த மண்டலங்கள் பிரிக்கப்பட்டு ஒரு சதுர அடிக்கு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட வேண்டும். ஏற்கனவே நடைமுறையில் உள்ள (4) நான்கு (A, B, C & D) மண்டலங்களை தற்போது 3 மண்டலங்களாக A, B,C-யாகபிரிக்கப்பட்டு அதன் எதிரே கண்டுள்ளவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயித்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ள தெருக்களின் பட்டியலுடன் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மண்டலம் | சதுர அடிக்கான அடிப்படை மதிப்பு | |
|---|---|---|
| | தற்போதைய மதிப்பு ரூ. | உயர்த்தப்பட்டுள்ள மதிப்பு ரூ. |
| A | ரூ.1.30 | ரூ.2.00 |
| B | ரூ.0.90 | ரூ.1.40 |
| C | ரூ.0.60 | ரூ.0.90 |
| D | ரூ.0.40 | நீக்கம் செய்யப்பட்டுள்ளது |

அ.கு : அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1536/2018/அ1

2. பொது நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 09.08.2018-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.8-ல் பி.கே.ஆர். காலனியில் மழைநீர் கால்வாய் மற்றும் கல்வெட்டு அமைக்கும் பணி | 10.00 | 1) எச். ஷபீர் அஹமத் | மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு |
| | | | 2) பி. மணி | மதிப்பீட்டு தொகையை விட 0.30% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணிக்கு 09.08.2018-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1474/2018/இ1

3. கல்வி நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 30.05.2018-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்)** | **மதிப்பீட்டு விகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண்.1-ல் விஎஸ்வி சாலை, பெரியபேட்டையில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியில் வகுப்பறைகள் மற்றும் தடுப்பு சுவர்களுக்கு வண்ணம்பூசும் பணி மற்றும் பழுது பணிகள் சரி செய்தல் | 5.00 | 1) ஜி.என். விஜயசீனிவாசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு |
| | | | 2) வி.பி.முருகன் | மதிப்பீட்டு தொகையை விட 0.30% அதிகம் |

அ.கு : 1) கல்வி நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.
3) மேற்காணும் பணிக்கு 30.05.2018-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1002/2018/இ1

4. வாணியம்பாடி நகராட்சி குடிநீர் நிதி 2018-19 ஆம் ஆண்டின் நிதியில் கீழ் காணும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி 02.08.2018 இன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் உள்ள மொத்த கைபம்புகள் 245 எண்கள் மற்றும் சிறு மின்விசை பம்புகள் 186 எண்கள் அவ்வப்போது ஏற்படும் பழுது பணிகள் சரி செய்து பராமரிப்பு மேற்கொள்ளுதல் பணி 2018-19 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2018 முதல் நவம்பர் 2018 வரை உள்ள காலத்திற்கு மட்டும் | 10.00 | 1.எஸ்.தாமோதரன்<br>2.எஸ்.சுந்தரேசன் | மதிப்பீட்டு தொகையை விட 0.30% அதிகம்<br>மதிப்பீட்டு தொகையை விட 0.20% குறைவு |

அ.கு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் குறைவான விலை விகிதம் கொடுத்து ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கலாம்.
3) பணியின் அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதியுடன் பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க எண் : 1260/2018/இ2)

5.	பொது நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 29.08.2018-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சி தெருவிளக்குகளுக்கு தேவையான உதிரிப்பொருட்கள் வாங்குதல் மற்றும் பராமரித்தல் பணி. | 6.00 | 1) ஜே.பி.என் எண்டர்பிரைசஸ் | மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவு |
| | | | 2) பி.எஸ்.கே எண்டர்பிரைசஸ் | மதிப்பீட்டு தொகையை விட 1.00% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் முன்னனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணிக்கு 29.08.2018-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1637/2018/இ1

1. இந்நகராட்சிக்கு சொந்தமான சி.என்.ஏ. சாலையில் உள்ள திருமண மண்டபம் பொது மக்களின் அனைத்து விதமான சுப நிகழச்சிகளுக்கு பயன்படுத்த பொது ஏலம் முறையில் செயல்பட்டு வந்தது. இந்நிலையில் வாணியம்பாடி நகராட்சி அலுவலகம் கட்டடம் சுமார் 100 ஆண்டு பழமை வாய்ந்த கட்டிடமாக இருந்ததால் அதனை இடித்துவிட்டு அவ்விடத்தில் புதிய அலுவலக கட்டிடம் ரூ.360.00 லட்சம் மதிப்பீட்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டது. அதனால் திருமண மண்டபத்தில் தற்காலிகமாக மாற்று ஏற்பாடாக நகராட்சி அலுவலகம் இயங்க ஏதுவாக திருமண மண்டபத்தின் ஏற்கனவே நடத்தி வந்த குத்தகையை இரத்து செய்ய நகர்மன்ற தீர்மான எண்.273 நாள் : 31.10.2014-ல் அனுமதி வழங்கியது. அதன்படி நகராட்சி புதிய அலுவலக கட்டிடம் 09.09.2017-ம் தேதி மாண்புமிகு தமிழக முதமைச்சரால் திறக்கப்பட்டது. தற்போது அலுவலகம் முழுமையாக மாற்றம் செய்யப்பட்ட நிலையில், திருமண மண்டபம் வாயிலாக நகராட்சி வருவாய் ஈட்டும் வகையில் பொது மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் திருமணம், காதணி மற்றும் நிச்சயதார்தம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடைபெற ஏதுவாக திருமண மண்டபத்தை நகராட்சி மூலமாக செயல்படுத்தவும், நிகழ்ச்சிகள் ஒன்றுக்கு குறைந்தபட்சம் ரூ.10,000/- குறையாத கட்டணம் என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் திருமண மண்டபத்தின் முன் பகுதியில் நகராட்சிக்கு வருவாய் பெருக்கும் வகையில் புதியதாக 5 கடைகள் கட்ட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு : 1 அனுமதிக்கலாம்

2 திருமண மண்டபத்தை நகராட்சி மூலமாக செயல்படுத்த மன்றம் அனுமதிக்கலாம்.

3 திருமண மண்டபத்தின் முன்பகுதியில் புதியதாக 5 கடைகள் கட்ட மன்றம் அனுமதிக்கலாம்.

4 மேற்படி திருமண மண்டபத்தில் சுப நிகழ்ச்சிகள் தவிர அரசியல் சார்ந்த மற்றும் மதம் சார்ந்த எந்தவிதமான கூட்டங்கள் நிகழ்ச்சிகள் நடைபெற அனுமதி இல்லை என்பதை மன்றம் அனுமதிக்கலாம்.

5 மேற்படி திருமண மண்டபத்தில் சுப நிகழ்ச்சிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்துடன் மின் பயன்பாட்டு அடிப்படையில் மின் கட்டணத்தை சம்மந்தப்பட்ட உபயோகதாரரிடம் வசூலிக்க மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.4659/2004/அ1

2. வாணியம்பாடி நகராட்சியில் நகரமைப்பு அலுவலராக பணிபுரிந்து வந்த திரு.ஜி.நமச்சிவாயம் என்பவர் பல்லாவரம் நகராட்சியில் பணியில் இருந்த போது முறைகேடாக சொத்து சேர்த்துள்ளதாகவும் இவர் பணியிலிருந்து 31.01.2011 ல் ஓய்வு பெறும் முன்பாகவே நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் 26.01.2011 அன்று தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டதால் சம்மந்தப்பட்டவருக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்கப்படாததால் தனக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்க வேண்டி அரசு செயலர், தலைமை செயலகம், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி ஆணையர், வாணியம்பாடி ஆகியோர் மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதையடுத்து மேற்படி

வழக்கு சம்மந்தமாக தயார் செய்யப்பட்ட உறுதி ஆவணம் நகராட்சி மூலமாக 18.10.2013 அன்று நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பில் உச்ச நீதி மன்ற நீதிபதி ஓய்வூதிய பயன்கள் வழங்கலாம் என்று தீர்ப்புரை வழங்கியுள்ளதையடுத்து W.P எண்.22269/18 ல் சென்னை உயர்நீதி மன்ற தீர்ப்பின் அடிப்படையில் சேமநல நிதி, ஈட்டிய விடுப்பு, ஈட்டா விடுப்பு மற்றும் சிறப்பு சேமநலநிதி தொகையை சம்மந்தப்பட்ட மனுதாரருக்கு வழங்குமாறு மீண்டும் செயலர், தலைமை செயலகம், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி ஆணையர், வாணியம்பாடி ஆகியோருக்கெதிராக வழக்கு தொடர்ந்துள்ளார்.

மேற்படி வழக்கில் செயலர், தலைமை செயலகம், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் ஆணையர், வாணியம்பாடி நகராட்சி ஆகியோருக்கெதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதால் மேற்படி திரு.எம்.ஏழுமலை, அரசு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்களின் 12.09.2018 ஆம் தேதிய கடிதத்தின்படி மேற்படி வழக்கு சம்மந்தமாக வக்காலத்து, எதிர் உறுதி ஆவணம் மற்றும் வழக்காடு கட்டணமாக ரூ.15,000/- ஐ செலுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அ.கு
1. மேற்படி தொகையை வழங்க அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேற்படி வழக்காட தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
3. மேற்படி தொகை பொதுநிதி 2018-19-ம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.883/2010/சி1.

3. குடிநீர் நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 11.09.2018-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் கொடையாஞ்சி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் வாரச்சந்தை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குளோரினேஷன் யூனிட்டுகளுக்கு பிளிச்சிங் கரைசல் (sodium Hypochlorite solution) திரவ முறையில் சப்ளை செய்தல் பணி | 9.80 | 1) ஸ்ரீ ராஜகணபதி இன்ஜினியரிங் | மதிப்பீட்டு தொகையை விட 0.34% குறைவு |
| | | | 2) ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் | மதிப்பீட்டு தொகையை விட 1.72% அதிகம் |

அ.கு : 1) குடிநீர் நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணிக்கு 11.09.2018-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.440/2018/இ2

4. பொது நிதி 2018-19-ஆம் ஆண்டு நிதியில் கீழ்க்கண்ட பணியை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டதில் 18.09.2018-ந் தேதியன்று பெறபட்ட ஒப்பந்தப்புள்ளியை ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்துள்ளதை மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் எரிவாயு தகன மேடைக்கு LPG Burner system and Cast Iron Body Resisting Bricks அமைக்கும் பணி. | 10.00 | 1) M.H.T ENGINEERING, 17/12, Karpaga Vinayagar kovil street, Ekkattuthangal, Chennai. | மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவு |
| | | | 2) YES YES JEE ENGINEERING, 11/91, Kamaraj street, Thiruvalluvar nagar, Ayanavaram, Chennai. | மதிப்பீட்டு தொகையை விட 1.00% அதிகம் |

அ.கு : 1) பொது நிதி 2018-19-ஆம் ஆண்டின் கீழ் செலவு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நிர்வாக அனுமதி மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.

3) மேற்காணும் பணிக்கு 18.09.2018-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரிய குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி ஏற்று மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 1822/2018/இ1

5. இந்நகராட்சி வாரச்சந்தை வார்டு.' இ' பிளாக்.' 14' நகரளவு எண்.119 மற்றும் 25–ல் வாரசந்தை பகுதியில் தேசிய மீன் வளர்ப்பு மேம்பாட்டு வாரியம் மூலம் 50% நிதி ஒதுக்கீடும், மாநில நிதியாக 40% நிதி ஒதுக்கீடும் மற்றும் நகராட்சி பொது நிதியாக 10% ஒதுக்கீடு செய்தும், புதிய நவீன மீன் சந்தையுடன் கூடிய பதப்படுத்தும் கட்டிடம் கட்டுவதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு

ரூ.120.00 இலட்சம் நிதியுதவி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் உரிய பிரேரணை ஒப்புதல் பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ந.க.எண்.941/2018/இ1

6. வாணியம்பாடி நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் (SBM)– திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2015-16-ஆம் ஆண்டின் கீழ் இந்நகராட்சியில் ஏற்கனவே உள்ள வளையாம்பட்டு உரக்கிடங்கில் கசடு கழிவு அகற்றும் (Bio Mining) பணிகள் மேற்கொள்ள 30.08.2018-ந் தேதியன்று பெறபட்டு தொழில்நுட்ப தகுதி அடிப்படையில் 11.09.2018-ந் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டதில், வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **மதிப்பீட்டு விகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | வாணியம்பாடி நகராட்சியில் ஏற்கனவே உள்ள வளையாம்பட்டு உரக் கிடங்கில் கசடு கழிவு அகற்றும் (Bio Mining) பணிகள் செய்தல் | 207.60 | 1) Shree Bommu Industries, 424, 6th Cross, Thanner Pandal, Villankuruchi Road, Peelamedu Post, Coimbatore – 641 004. | மதிப்பீட்டு தொகையை விட 6.26% கூடுதல் |
| | | | 2) Green Fine Equipments, 2/61, Annai Vellankanni Nanagar, Vinayagapuram, V.K.Road, Saravanampatty post, Coimbatore. | மதிப்பீட்டு தொகையை விட 7.36% அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:</u>

1. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் தொழிநுட்ப தகுதி அடிப்படையில் தகுதி பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளின் விலைவிகிதத்தினை ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் Shree Bommu Industries அவர்கள் 6.26% சதவீதம் கூடுதலாக கொடுத்துள்ளார்.
2. மேற்கண்ட பணியானது முதல் அழைப்பாக உள்ளது. விலைவிகிதமானது மதிப்பீட்டை விட கூடுதலாகவும் உள்ளது. எனவே விலைகுறைப்பு கோரி கடிதம் அனுப்பியதில் மதிப்பீட்டை விட கூடுதலாக 4.95% மட்டும் பணிகள் செய்ய முடியும் என ஒப்பந்ததாரர் தெரிவித்ததை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
3. மேலும் மேற்காணும் பணியானது தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திட்டப்பணி என்பதால் குறித்த காலத்தில் முடிக்க வேண்டியுள்ளதால், பணியின் அவசியம் கருதி கொடுக்கப்பட்ட விலைவிகிதத்தினை ஏற்கலாம்.
4. மதிப்பீட்டு விகிதத்திற்கு மேல் அரசு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகைக்கு கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : 1493/2016/இ1)**

7. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி கலையரசி க/பெ மகேந்திரன் என்பவர் தனது குடும்ப சூழ் நிலை காரணமாக திருப்பத்தூர் நகராட்சி துப்புரவு பணியாளர் பணியிடத்திற்கு பணியிடமாறுதல் கோரியுள்ள மேற்படி மாறுதல் விண்ணப்பத்தினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் ந.க.எண்: 3307/2018 நாள்:06.09.2018ந் தேதிய கடிதத்தில் வரபெற்ற விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து நகரமன்ற ஒப்புதல் பெற்று அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சி துப்புரவு பணியாளர் திருமதி எம்.கலையரசி க/பெ மகேந்திரன் என்பவர் திருப்பத்தூர் நகராட்சிக்கு துப்புரவு பணியாளராக பணிபுரிய இடமாறுதல் செய்ய வேண்டி மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>: அனுமதிக்கலாம்

ந.க.எண்:1343/18/எச்1